பகுதியாகும். அந்தப் பகுதியிலேயிருக்கும் 6 ஊராட்சிகளிலேயிருக்கின்ற மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்கள் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டும். அவர்களுக்குக் கடந்த காலங்களில் சாலை வசதியில்லாமல் இருந்தது. முன்பு மாண்புமிகு துணை முதல்வராக இருந்த தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலோடு சாலை அமைக்கப்பட்டு, எட்டு ஆண்டுக் காலம் ஆகின்றது. இன்னும் அந்தப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லை. எனவே, ஜவ்வாதுமலைப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மலைப் பகுதியில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதாகும். அந்தப் பகுதிகளில் இயக்கப்படுகின்ற பேருந்துகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

சமுதாயக் கூடம்

***9868—திரு. ஆர். சுந்தரராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2017 பிப்ரவரி 1]

ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பி குறிச்சி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோடம்பாக்கம் தொடங்கி கோட்டை வரை, தான் தொட்ட துறையெல்லாம் சாதனை செய்த ஒரே சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பு முதல் இரும்பு வரை, ஊசி முதல் ஏ.சி. வரை ஈசியாய் செய்ய தமிழகத்தை வழிவகுத்த தனிப்பெரும் தெய்வம், எங்கள் புரட்சித் தலைவி அம்மாவிற்கு என் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா எங்களுக்கு மூலவர், சின்னம்மா எங்களுக்கு உற்சவர். அம்மா எங்களுக்கு உயிர், சின்னம்மா எங்கள் உயிரைக் காத்த உயிர். அம்மா எங்களுக்கு வள்ளல், சின்னம்மா எங்கள் வள்ளலைக் காத்த வள்ளல். கழகப் பொதுச் செயலாளர் சின்னம்மாவின் மேன்மைமிகு ஆசியோடும், அன்பு, பண்பு, பணிவு இவற்றின் அடையாளச் சொல்லாய் விளங்கும் மாண்புமிகு முதல்வரையும் வணங்கி எனது பதிலை அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில், ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பி குறிச்சி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த கோரிக்கை, மக்கள் தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

முற்பகல் 11-30

திரு. ஆர். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றிய ஒளிவிளக்கு, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த மகா சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முகவரி கொடுத்த மூகாம்பிகை, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குலசாமி, அன்னை சந்தியா தாய் தந்த தெய்வத் தாய், அம்மாவை வணங்குகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரின் மறு உருவமாக, கழகத்தின் பொதுச் செயலாளராக, மூலவராகத் திகழ்கின்ற எங்களுடைய சின்னம்மாவை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே அடிபிறழாமல், 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்பதற்கு நிகராக, இன்றையதினம், தமிழ்நாட்டின் பண்பாட்டு விளையாட்டான ஜல்லிக்கட்டிலே, தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மாவைப்போல் ஆட்சி செய்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பிக் குறிச்சி பகுதியில் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகின்ற அந்தப் பகுதி மக்கள் மிகவும் குறுகலான தெருக்களிலே இருந்து வருகின்றார்கள். அவர்களுடைய வருமானம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள காரணத்தால், வணங்கிய கைகள் பிரியும் முன்னே வரம் தரும் நம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அந்தப் பகுதியில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஒரு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஆதி திராவிட இன மக்களுக்கு தன்னிடம் உள்ளதைத் தந்த தலைவர்கள் உண்டு. ஆனால்,

2017 பிப்ரவரி 1]

தன்னையே தந்த ஒரே தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், கடந்த ஐந்தாண்டுகளில் 50 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு, நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. முந்தைய நாள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளை நீக்கியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், நான் ஆற்றிய ஆளுநர் உரையிலிருந்து, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துவைத்த அந்தக் கருத்தின் அடிப்படையிலே, அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறீர்கள். நீக்கி இருப்பதிலிருந்து இங்கே நான் எடுத்துச்சொல்ல விரும்புவது, உங்களுடைய உரிமையிலே, நீங்கள் உத்தரவிட்டிருக்கக்கூடிய அந்த நிலையிலே, நான் குறுக்கிடுவதாக தயவுசெய்து நீங்கள் கருதிவிடக் கூடாது. நான் ஆற்றிய உரை என்னவென்று கேட்டால், தமிழகத்தைப் பொறுத்தவரை, நல்ல பொறுப்புள்ள ** என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆக, ** என்பது இந்த அவையிலே பயன்படுத்தக்கூடாத வார்த்தையா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் எதிர்க்கட்சித்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*